தேசிய நூலக ஆவணவாக்கள் சேவைகள் சபை
ஆலோசனைச் சுற்று நிரூபம் 2004/மச/02(அ) (திருத்தம் 2017)

# பிரதேச கலாச்சார நிலையங்கள் / கல்வியியல் கல்லூரிகள் / தொழில்நுட்பக் கல்லூரிகளின் நூலகங்களில் ஒக்டோபர் - தேசிய வாசிப்பு மாதச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

## 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டிலிருந்து ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 2017 ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் வாசிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு பல விசேட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு சகல பிரதேச கலாச்சார நிலையங்கள் / கல்வியியல் கல்லூரிகள் / தொழில்நுட்பக் கல்லூரிகளின் நூலகங்களினையும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. மக்கள் மற்றும் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை அபிவிருத்தி செய்தல், நூலக வளங்கள் மற்றும் சேவைகளை நவீனப்படுத்தல் போன்ற செயற்றிட்டங்களை குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

## 02. வாசிப்பு மாதம் தொடர்பான செயற்குழு

தேசிய வாசிப்பு மாதத்திற்காக செயற்திட்டங்களை ஒழுங்குப்படுத்தும் பொருட்டு வாசிப்பு மாதம் தொடர்பாக செயற்குழு ஒன்றை நியமித்தல் வேண்டும். ஏற்கனவே நூலகக் குழு ஒன்று இருக்குமேயானால் அக்குழுவின் ஊடாகவும் வாசகர் மட்டமும் இணைந்து இச் செயற்பாட்டை நிறைவேற்ற முடியும். பிரதான செயற்குழு ஒன்றை நியமிப்பது பொருத்தமானதாகும். அதில் உள்ளடக்கப்படுவோர் விபரம் பின்வருமாறு:

- நிறுவனத்தின் தலைவர் அல்லது பிரதித் தலைவர் - குழு தலைவர்
- நூலகர் அல்லது நூலகப் பொறுப்பாளர் - குழுச் செயலாளர்
- பாடங்களுக்கு பொறுப்பான இரண்டு அலுவலர்கள்
- நிறுவனத் தலைவரினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள்கள். (மாணவர்கள்/ மாணவிகள்)

## 03. நடைமுறைப்படுத்தக் கூடிய செயற்திட்டங்கள்

- பனர் / மேற்கோள்கள் மற்றும் போஸ்டர்களை காட்சிப்படுத்தல். (வாசிப்பின் பெறுமதியை உள்ளடக்கும் விதத்தில்)
- விசேட போட்டிகளை நடாத்துதல். (கட்டுரை, சித்திரம், பேச்சு, விவாதம், நடனம் மற்றும் பாட்டுப் போன்ற பல்வேறு பிரிவுகள்)
- சுவர் செய்தித்தாள் மற்றும் ஆக்கங்களை வெளியிடுதல், நூலகம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்தல்.
- நூலக கண்காட்சிகளை நடாத்துதல்.
- சிரமதானம் / நூலகத்தை புதுப்பித்தமைத்தல் போன்ற செயற்பாடுகள்.
- கணினி மற்றும் இணைய வசதிகளைப் பெற்றுக் கொள்ளல்.
- புதிய சேவைகளை ஆரம்பித்தல். இணையதளங்கள் மூலம் தகவலை பெற்றுக்கொடுத்தல்.
- நிதி சேகரித்தல், நூற் கொள்வனவு மற்றும் அன்பளிப்புக்களைப் பெறுதல், அன்பளிப்பு வழங்குதல் போன்ற செயற்பாடுகள் மற்றும் புதிய உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
- நூலகம் மற்றும் அதன் வளங்கள் தொடர்பாக பிரஜைகளுக்கு அறியத் தருதல்.
- மாநாடுகள் மற்றும் விரிவுரைகளை ஒழுங்குப்படுத்தல்.
- வாசகர்களின் தொகை அதிகரித்தலும் ஊக்குவித்தலும்.
- புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளல்.
- புதிய தொழில் நுட்பத்தினூடாக தகவல் தேடுதல் (இன்டர்நெட்) தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்.
- நூலக வளங்களை பேணல் பாதுகாத்தல்.

- கதை சொல்லும் நேரம், சினிமாப்படம் மற்றும் வீடியோ காட்சிகள் போன்ற பல்வேறு பொழுதுப் போக்குச் செயற்றிட்டங்களின் மூலம் வாசிப்புப்பழக்கத்தை ஊக்குவிப்பு செய்தல்.
- வாசிப்பு முகாம், வாசிப்பு போட்டிகளை நடாத்துதல்.
- வாசிப்பு சம்மந்தமான விழிப்புனர்வினை ஏற்படுத்தும் பேரணிகளை நடாத்தல்.
- நூலகத்தில் இனையத்தள சேவை அல்லது வலையமைப்பு சேவையினை ஆரம்பித்தல்.
- நடமாடும் நூலகச் சேவையை ஆரம்பித்தல்.
- வாசிப்பு பழக்கம், இலக்கியம், சித்திரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றில் வாசிப்பின் முக்கியதுவத்தினை உணர்த்தும் தலைப்புக்களில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் கட்டுரைகளை எழுதி வெளியிடல். ( ஊழியர்கள், வாசகர்கள் மற்றும் மாணவர்கள் வெளியிடல்)
- திறனை மதிப்பிட்டு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கும் விழாக்களை ஒழுங்குப்படுத்தல்.

04. நிதி

இதன் பொருட்டு பாரியளவில் நிதியை உபயோகப்படுத்தத் தேவையில்லை. உங்கள் நிறுவனத்தின் நிதியிலிருந்து ஒரு தொகையையும், நூலக நிதியிலிருந்து ஒரு தொகையையும் உபயோகித்தல் போதுமானதாகும். நிதி சேகரிக்கும் முறை பிரதேசத்தில் உள்ள செல்வந்தர்கள், தொழிலதிபர்கள் மற்றும் நிதி ஆதரவு அளிக்க பொருத்தமானமானவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு செயற்குழு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

05. மதிப்பாய்வு

நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகல செயற்திட்டங்கள் தொடர்பாகவும் தயாரிக்கப்பட்ட அறிக்கையானது புகைப்படங்கள், இறுவெட்டுக்கள் மற்றும் வேறு ஆதாரங்களுடன் நிறுவனத் தலைவரின் விதந்துரையுடன் **2018 ஜனவரி 31** ஆம் திகதிக்கு முன்னர் ***பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல 14, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07*** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

தேசிய வாசிப்பு மாதத்தில் செயற்றிறன் மிக்க செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நூலகங்கள் தெரிவு செய்யப்பட்டு 2018 ம் ஆண்டு தேசிய வாசிப்பு மாத விருது வழங்கும் விழாவில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

கலாநிதி டபிள்யு. ஏ. அபேசிங்க
தலைவர்

**Dr. W. A. ABEYSINGHE**
Chairman
National Library & Documentation Services Board
14, Independence Avenue,
Colombo 07.

மேலதிக விபரங்களுக்கு:- தொலை பேசி இல – 011-2698847, தொலை நகல் - 011-2674387, இணையத்தளம் - www.natlib.lk